THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 26th October 1957.

The House met in the Assembly Chamber, Fort St. George, at nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Postal strike

* 1 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state whether it is a fact that this Government mobilized non-gazetted officers of this State in August 1957 for the delivery of letters and telegrams in case the employees of the Posts and Telegraphs Department struck work?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI N. K. PALANISAMI : தபால், தந்தி ஊழியர்களுடைய வேலை நிறுத்த காலத்தில் சர்க்கார் இங்கு இருக்கக்கூடிய வயர்லெஸ் டிப்பார்ட்மெண்டில் இருக்கக்கூடிய போலீஸ்காரர்களுக்கு, இந்த மாதிரி ஸ்ட்ரைக் ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டால் அவர்கள் தந்தி, தபால் வினியோகிப்பதற்கு வரவேண்டுமென்று ஏதாவது உத்தரவு போட்டார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, the question relates to the mobilization of non-Gazetted officers of this State. If the hon. Member wants any other information, he may put a separate question.

SRI K. VINAYAKAM : Sir, did the Postal Department approach the State Government for such an aid?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI A. A. RASHEED : அப்படி சித்தப்படுத்தி வைத்திருந்தால் அது தவறாகுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் இங்கே அபிப்பிராயம் சொல்வதற்காக இல்லை, கேள்வி கேட்டால் பதில் சொல்வதற்காக இருக்கிறேன்.

SRI M. P. SUBRAMANIAM : சென்னை அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கத்திலிருந்து இந்த மாதிரி ஸ்ட்ரைக் ஏற்படுமானால் இந்தச் சூழ்நிலையை சமாளிக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமென்று ஏதாவது தாக்கீது அல்லது அறிவிப்பு ஏதாவது வந்திருந்ததா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த அரசாங்க உத்தியோகஸ்தர்களை இதற்குப் பயன்படுத்த வேண்டுமென்ற முறையில் எந்தவிதமான தகவலும் வரவில்லை. ஆனால் வேலை நிறுத்தம் ஏற்படுமானால் அதைச் சமாளிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்துகொள்வதற்கு என்னென்ன ஏற்பாடுகள் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்,

[26th October 1957

SRI N. K. PALANISAMI : மாகாண என்.ஜி.ஓ. யூனியன் இம்மாதிரி சர்க்கார் கூப்பிட்டாலும் நாங்கள் இம்மாதிரி கருங்காலிகளாக வரமாட்டோம் என்று அவர்கள் தீர்மானம் செய்தது பற்றி சர்க்காருக்குத் தகவல் வந்ததா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கருங்காலித்தனம் பற்றி அங்கத்தினருக்குத்தான் தெரியும்போல் இருக்கிறது. அவர்கள் ஏதாவது சொன்னால் அதை ஏற்றுக் கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : அப்படி தபால் வேலை நிறுத்தம் ஏற்பட்டால் எப்படி தபால் பட்டுவாடா செய்வது, யாரைக்கொண்டு பட்டுவாடா செய்வது, அதற்குத் தேவையான சிப்பந்திகளை வேறு ஏதாவது இலாகாவிலிருந்து கொடுக்க வேண்டுமென்று மாகாண சர்க்காருக்கு மத்திய சர்க்காரிலிருந்து யோசனை வந்ததுண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எங்களிடமிருந்து ஆள் கேட்டு எந்த விதமான தகவலும் வரவில்லை. வேறு என்ன ஏற்பாடுகள் செய்தார்கள் என்பதை பார்லிமெண்டிலுள்ள அங்கத்தினர்களின் சகாக்கள் கேட்டு பதில் பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

SRI S. PAKKIRISAMI PILLAI : போதுமான அவகாசம் கொடுத்து தபால், தந்தி சிப்பந்திகள் வேலை நிறுத்தம்செய்த காரணத்தினால் அதற்கு விரோதமாக ஏன் அரசாங்கம் நடந்து கொண்டார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த கேள்வியே எனக்குப் புரியவில்லை. வேலை நிறுத்தம் செய்தால் அப்பொழுது ஒருவருக்குமே தபால், தந்தி போகக்கூடாதென்ற கருத்து தெரிவிக்கிறார்களா என்று தெரியவில்லை. அவர்கள் வேலை நிறுத்தம் செய்தால் சமுதாயத்திற்கு வேண்டிய அத்தியாவசியமான சேவைகள் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துதான் தீரவேண்டும்.

SRI A. VEDARATNAM PILLAI : பொது ஜன சௌகரியத்தை உத்தேசித்து இந்த வேலைகள் தடைபடாமல் நம் மாகாண சர்வீஸில் இருக்கிறவர்களை இந்த வேலைக்குப் பயன்படுத்துவது குற்றமாகுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைத்தான் சொன்னேன். இது குற்றமா, இல்லையா என்பது கேள்வி அல்ல. என்னைப் பொறுத்த வரையிலே, என்னுடைய அபிப்பிராயத்தை தெரிந்து கொள்ளவேண்டுமென்று அங்கத்தினர்கள் ஆசைப்பட்டால், வேலை நிறுத்தத்திற்காக ஏற்பாடு செய்தது தவறு என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். வேலை நிறுத்தம் ஏற்பட்டிருந்தால், அவ் வேலைகளை தொடர்ந்து நடத்துவதற்கு என்ன காரியங்கள் செய்யவேண்டுமோ அவைகளை இந்த சர்க்கார் செய்துதான் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதில் எந்தவிதமான தவறும் கிடையாது.

SRI V. K. KOTHANDARAMAN : தபால், தந்தி சிப்பந்திகளின் போராட்ட காலத்தில் வேலை செய்வதற்காக வேண்டி கெஜெட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களை, கீழ்தர உத்தியோகஸ்தர்களை எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ஜ் போர்ட் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இதை ராஜ்ய சர்க்காரின் உத்தரவு இல்லாமல் தேர்ந்தெடுத்திருக்கிறார்களா ? அல்லது ராஜ்ய சர்க்காரின் உத்தரவின் பேரிலா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இங்கு உத்தியோகத்தில் இருக்கிறவர்கள் எப்படி எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்ஜூக்குப் போவார்கள் என்று தெரியவில்லை.

SRI S. NAGARAJA MONIGAR : வேலை நிறுத்தம் செய்யும் இலாகாவினருடைய குறைகள் தீரவேண்டுமென்பது அங்கத்தினர்களுடைய கோரிக்கையா, அல்லது யார் யார் வேலை நிறுத்தம்

26th October 1957]

ஆரம்பிக்கிறார்களோ அவைகள் எல்லாம் வெற்றிகரமாக நடந்து பொது ஜனங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் ஏற்படட்டும் என்பதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கத்தினர்களுடைய கோரிக்கை என்னவென்று தெரியாது. ஆனால் சில அங்கத்தினர்கள் எங்கே, எந்த விதமான வேலை நிறுத்தம் ஏற்பட்டாலும் அதற்கு அவர்களின் ஆதரவைக் கொடுக்கவேண்டுமென்று சொன்னால் அதற்கு நாம் ஆட்சேபணை சொல்லமுடியாது. அது அவர்கள் விஷயம்.

SRI N. K. PALANISAMI : மத்திய அரசாங்கமே அவர்களது கோறிக்கையை ஒப்புக்கொண்டு வேலை நிறுத்தம் வேண்டாம், அதற்குப் பதிலாக ஒரு ட்ரிப்யூனல் ஏற்படுத்தி விசாரணை செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்கள் பல தரம் கேட்டார்கள் ; ஆனால் சர்க்கார் அதற்கு மறுத்தார்கள். ஆகவேதான் இம்மாதிரி ஸ்ட்ரைக் நோட்டீஸ் கொடுத்தார்கள். கனம் மந்திரியவர்கள் இது தவறான கொள்கை என்று சொன்னார்கள். எந்த அடிப்படையில் அப்படிச் சொன்னார்கள் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : என்னுடைய அபிப்பிராயத்தைச் சொன்னேன். அதை ஏற்றுக்கொள்ள அங்கத்தினருக்கு உரிமையுண்டு. ஏற்றுக் கொள்ளாமல் இருக்கவும் உரிமையுண்டு.

Employment of convict labour

* 2 Q.—SRI S. PAKKIRISAMI PILLAI : Will the Hon. the 9–10
Minister for Home be pleased to state— p.m.

(a) whether it is a fact that certain convicts in the Madras Central Jail are made to work in the Government Bus Transport Workshop, Madras, as full-time workers;

(b) if so, what their service conditions are; and

(c) whether they will be given any service certificates at the time of their release from the prison?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) Prisoners who are suitable from the point of view of aptitude and discipline are selected for service in the Government Bus Service Depot and the following concessions are allowed to them :—

(1) They are granted the maximum special remission to which they are entitled;

(2) They are paid an allowance of one anna per head per day by the State Transport department to the Jail department towards the purchase of tobacco and betel for their use. In the case of those who do not use tobacco and betel, the amount is credited to their account and handed over to them at the time of their release.

(3) They are supplied one cake of carbolic soap per month per head and one ounce of gingelly oil per head on every Sunday excepting the Sunday on which all the prisoners in the Central Jail, Madras, are issued gingelly oil.

(4) They are issued two additional sets of blue clothing.

(c) Yes, Sir.